புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஜனவரி 16, 2025 • புரட்சி 25 • முழக்கம் 01 • விலை ரூ.3.00

## பொதுச்செயலாளருக்கு பெரியார் விருது வழங்கினார் முதலமைச்சர்

# இராயப்பேட்டையில் கழகத் தோழர்கள் உற்சாக வரவேற்பு




*தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 2024-ஆம் ஆண்டுக்கான பெரியார் விருது, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. சனவரி 15-ஆம் தேதி திருவள்ளுவர் தினத்தையொட்டி தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகப் பொதுச்செயலாளருக்கு பெரியார் விருதுடன், ரூ.5 இலட்சத்திற்கான காசோலை, ஒரு சவரன் மதிப்பிலான பதக்கம், விருதுக்கான தகுதியுரை வழங்கிக் கவுரவித்தார்.*

*ஏற்கெனவே கழகப் பணிகள் மற்றும் பொதுச்செயலாளரின் அரை நூற்றாண்டுக்கும் மேலான எழுத்துப் பணிகளுக்கான அங்கீகாரமாக, 2022-ஆம் ஆண்டில் கழகப் பொதுச்செயலாளரின் நூல்களை நாட்டுடைமையாக்கிப் பெருமை செய்தது திராவிட மாடல் அரசு. தற்போது பெரியார் குறித்த விவாதங்களும், உரையாடல்களும் தீவிரமாக நடந்துவரும் இந்த காலகட்டத்தில் பொதுச்செயலாளருக்கு பெரியார் விருது அளித்திருப்பது கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

### கொள்கைகளைப் பரப்ப உற்சாகம் அதிகரித்துவிட்டது!

பெரியார் பேசுபொருளாக மாறியிருக்கிற காலச்சூழலில் திராவிட மாடல் அரசு எனக்கு பெரியார் விருது வழங்கி கவுரவித்திருப்பதை ஒரு மிகப்பெரிய பெருமையாகக் கருதுகிறேன். பெரியார் கருத்துக்கள் நாட்டிற்கு மிக மிகத் தேவையான கருத்துக்களாக இருக்கிறது என்பதைச் சமகால சமூக - அரசியல் சூழல்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்சனைகள் எல்லாம் பெரியாரியலை மேலும் வலுவாகக் கொண்டு சேர்ப்பதற்கான வாய்ப்புகளாக உள்ளன. இந்த வாய்ப்புகளைப் பெரியாரியத்தின் எதிரிகளே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பெரியார் காலத்தில் இருந்து அவருடைய கொள்கைகள் வேகமாகப் பரவியது அவருடைய எதிரிகளால் தான் என்று பெரியாரே திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார். எனவே இந்த ஒரு சூழ்நிலையில் பெரியார் விருதை வழங்கி கவுரவித்திருப்பது, பெரியாரியத் தொண்டை மேலும் உற்சாகமாகச் செய்ய வேண்டும் என்று ஊக்கப்படுத்துகிற விருதாகவே நாங்கள் கருதுகிறோம். அதற்காக முதலமைச்சருக்கு எங்களுடைய நன்றி. பெரியாரியலுக்கு எதிராக பரப்பப்படும் தவறான திசைதிருப்பும் பிரச்சாரங்களை முறியடிக்க வேண்டும் என்ற உந்துசக்தியும் அதிகரித்திருக்கிறது. பெரியாரியலை இன்னும் வேகமாக முன்னெடுக்க நாங்கள் உறுதி ஏற்கிறோம்.

*(விருதுபெற்ற பின்னர் சன் நியூஸ் தொலைக்காட்சிக்கு கழகப் பொதுச் செயலாளர் அளித்த பேட்டியில் இருந்து)*

இராயப்பேட்டையில் உற்சாக வரவேற்பு



*கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பேராசிரியர் சரஸ்வதி, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் உமாபதி ஆகியோருடன் சென்று தலைமைச் செயலகத்தில் விருதைப் பெற்றுக்கொண்ட கழகப் பொதுச்செயலாளர், அங்கிருந்து புறப்பட்டு நேரடியாக இராயப்பேட்டை பத்ரிநாராயணன் நினைவு படிப்பகத்திற்கு வருகை வந்தார்.*

*அங்கு பொதுமக்கள், கழகத் தோழர்கள், திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலைச்*

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### முதலமைச்சரின் தகுதியுரை

தந்தை பெரியாரின் கொள்கைகளை பரப்பிவரும் பத்திரிக்கையாளரும் எழுத்தாளருமான திரு.விடுதலை இராசேந்திரன் அவர்கள், 1969ல் மயிலாடுதுறையில் திராவிடர் கழகத்தின் இளைஞரணியில் இணைந்து பெரியாரியம் தொடர்பாக பொதுக்கூட்டங்கள் மற்றும் பல பகுத்தறிவு நிகழ்ச்சிகளை நடத்தி பெரியாரின் கொள்கைகளைப் பேசவும் எழுதவும் தொடங்கியவர். தந்தை பெரியாரை அழைத்து மயிலாடுதுறையில் பொதுக்கூட்டம் மற்றும் கருத்தரங்கம் நடத்தியவர். பெரியாரின் இயக்க ஏடுகளில் 25 ஆண்டுகள் துணை ஆசிரியராகப் பணியாற்றியதோடு பெரியார் பேசிய கூட்டங்களில் அவரது உரையைக் குறிப்பெடுத்து பதிவு செய்தவர். இவர் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளராக செயல்பட்டு வருகிறார்.

திரு.விடுதலை இராசேந்திரன் அவர்கள் தந்தை பெரியாரின் சமூகநீதி, ஜாதி ஒழிப்பு மற்றும் பெண்ணுரிமைத் தளங்களில் கடந்த 58 வருடங்களாகத் தொண்டாற்றி வருகிறார். பெரியார் கண்ட கனவான ஜாதி மற்றும் பாலின ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமுதாயத்தை உருவாக்கவும், விளிம்புநிலை மக்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காகவும் மக்களை அணிதிரட்டிப் போராடி வருபவர். மக்களை விழிப்படையச் செய்யும் வகையில் பல்வேறு பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊடகங்களில் பேசிவருபவர். இவர் இதுவரை 58 நூல்களை எழுதியுள்ளார். இவரின் அனைத்து நூல்களும் 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டது. 1982ஆம் ஆண்டு மதவாத அரசியலை எதிர்த்து இவர் எழுதிய நூலை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வெளியிட்டு சிறப்பித்துள்ளார்.

சமூகநீதிக்காக முழு நேரமாக தொண்டாற்றி வரும் திரு.விடுதலை இராசேந்திரன் அவர்களைப் பாராட்டும் வகையில் அன்னாருக்கு தமிழ்நாடு அரசு, 2024-ஆம் ஆண்டிற்கான 'தந்தை பெரியார் விருது' அளித்து, அய்ந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையையும் தங்கப் பதக்கத்தையும் தகுதியுரையையும் வழங்கிச் சிறப்பிக்கின்றது.

தலையங்கம்

# வரலாற்றுப் போக்கைத் திருப்பியவர் பெரியார்



பெரியார் பற்றி அண்ணா இவ்வாறு கூறினார்; "ஒரு சகாப்தம்; ஒரு திருப்புமுனை; ஒரு காலகட்டம்; நூற்றாண்டு வரலாற்றை ஒரு குடுவைக்குள் அடக்கியவர்." (Putting Centuries In Capsules) சமூகவியல் பார்வையில் வரலாற்றுப் போக்கைத் திருப்பியவர் பெரியார்.

இந்தியாவில் பார்ப்பனியத்தை எதிர்த்த முதல் புரட்சிக்காரர் புத்தர். வேதம் - யாகம் - சமூகக் கொடுமைகளை எதிர்த்து புத்தர் மக்களைச் சந்தித்து உரையாடினார். அவரின் கொள்கைகளைப் பரப்ப அவரது சீடர்கள் மக்களைச் சந்தித்து புத்தரின் கருத்தியலைப் பரப்பினார்கள். அதே புத்தர் இயக்கத்தை அவரது மறைவுக்குப் பிறகு பார்ப்பனியம் ஊடுருவிச் சிதைத்தது. பார்ப்பனியத்தை எதிர்த்து சார்வாகர்கள், சித்தர்கள், சமணர்கள், வள்ளலார் என்ற சீர்திருத்தவாதிகள் வந்தார்கள். பார்ப்பனியம் அவர்களை ஜீரணித்துவிட்டது. வரலாற்றில் இருந்து பாடம் பெற்ற பெரியார் எந்த இயக்கமும் எந்தப் புரட்சியாளரும் பின்பற்றாத புதிய நடைமுறைகளையும், கருத்துகளையும் தனது இயக்கத்துக்காகக் கட்டமைத்தார்.

1. தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்கி சமுதாய இயக்கமாக்கினார்.

2. எதைச் சொன்னால் மக்கள் ஆதரிப்பார்கள் என்ற வெகு மக்கள் பார்வையில் இருந்து தன்னை விடுவித்து கசப்பு மருந்துகளே நோய்க்குத் தீர்வாகும் என்ற முடிவுக்கு வந்தார்.

3. பாராட்டுகளில் இருந்து தன்னை முழுமையாக விடுவித்துக் கொண்டார். கடுமையான நோய்க்கு சிகிச்சையும் கடுமையாக இருக்க வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடு.

4. அந்தக் காலங்களில் பெரியார் கூட்டங்கள் என்றால் அங்கே கைதட்டல்கள் இருக்காது. மாறாக கல் வீச்சு, முட்டை வீச்சு, செருப்பு வீச்சுகளே இருக்கும். அந்தத் தாக்குதலுக்கு ஓடி ஒளியாமல் சிங்கமாக அவர் முழங்கினார்.

5. எந்த மக்கள் தன்னைக் காயப்படுத்தி சிறுமைப்படுத்தினார்களோ அவர்களின் சுயமரியாதைக்காகவே முழங்கினார், எழுதினார், போராடினார்.

6. போராட்டத்தின் நோக்கம் திசை மாறிவிடக்கூடாது என்பது அவரின் பார்வை. காவல்துறை அடக்குமுறை என்றாலும் போராட்டத்தின் நோக்கத்திற்கே முன்னுரிமைக் கொடுங்கள் என்று கட்டளையிட்டார்.

7. பெரியார் மீது ராஜ துரோகம் அடக்குமுறை சட்டங்கள் பாய்ந்தன. எத்தனையோ தலைவர்கள் மீதெல்லாம் அடக்குமுறை சட்டங்கள் பாய்ந்துள்ளன. அப்போதெல்லாம் சட்டங்களை ஏவியவர்கள் மீது கண்டனங்கள் வெடித்துக் கிளம்பின. ஆனால் பெரியாரோ மாறுபட்டு நின்றார். "நான் அடக்குமுறைகளை வரவேற்கிறேன். இதன் வழியாக எனது கொள்கைகள் பரவுகிறது" என்றார் பெரியார். அடக்குமுறைகளைக் கொள்கைக்காக வரவேற்ற தலைவரை உலகத்தில் வேறு எங்கேனும் காட்ட முடியுமா?

8. "எத்தனை வழக்குகளும் வரட்டும். நீதிமன்றத்தில் எதிர் வழக்காட மாட்டேன், அபராதமும் கட்ட மாட்டேன்" என்று வாழ்வின் இறுதிவரை கடைப்பிடித்தவர் பெரியார். பிணை கேட்டது இல்லை, முன் பிணை கேட்டது இல்லை, பேல்முறையீட்டுக்குச் சென்றது இல்லை.

9. அடக்குமுறைகளைப் போல நீதிமன்றத்தையும் தனது கொள்கைகளைப் பரப்பும் களமாக்கியவர் பெரியார். ஒவ்வொரு வழக்கிலும் எதிர் வழக்காட மறுத்தது மட்டுமின்றி தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை ஏற்றுகொண்டு அதிகபட்ச தண்டனைகளை நீதிமன்றம் தர வேண்டும் என்று நீதிபதிகள் முன் அறிக்கையாக வாசித்தப் புரட்சியாளர். "பார்ப்பனர்கள் நீதிபதியாக உள்ள நாடு கடும்புலிகள் உள்ள காடு" என்று பார்ப்பன நீதிபதிகள் முன்பே முழங்கியத் தலைவர்.

10. ஆடம்பர வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கினார். மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டியில் பயணம் செய்தார். வெளிநாட்டுப் பயணம் செய்த கப்பல்களில் கூட சரக்குகளை ஏற்றும் பகுதியில் குறைந்த விலையில் டிக்கெட்டுகளை வாங்கிப் பயணம் செய்தவர்.

11. இழிவைத் திணித்து உரிமையைப் பறித்த பார்ப்பன இந்து சமயக் கட்டமைப்பை கடப்பாரைக் கொண்டு இடித்தத் தலைவர். சாஸ்திரம், புராணம், பார்ப்பனியத்தை மக்கள் மத்தியில் பள்ளிக் குழந்தைகளுக்கு பாடம் நடத்துவது போல் தனது ஒவ்வொரு மேடைப் பேச்சையும் அமைத்துக் கொண்டார்.

12. தாய்மார்களே! என்று முதலில் பெண்களை விழித்து அவரது உரை தொடங்கும். "நான் கூறும் கருத்தை பகுத்தறிவுக் கொண்டு சிந்தியுங்கள் உடன்பட்டால் மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள் இல்லையேல் தள்ளி விடுங்கள்" என்று அவரது ஒவ்வொரு உரையும் முடியும். கருத்துகளைக் கடுமையாகச் சொன்னாலும் மக்களின் கருத்துரிமையை மதித்தவர் பெரியார்.

13. பொது வாழ்வில் பொது ஒழுங்கு வேண்டும் என்றார் பெரியார். தனது பயணத்துக்கு வழங்கப்பட்ட பிரச்சார வாகனங்களில் சொகுசு வசதி கூடாது என்று கூறிய தலைவர். பெட்ரோல் விலை கூடுகிறது என்பதால் டீசல் இஞ்சின் மாற்றிக்கொண்டார்.

14. கையெழுத்துப் போடவும், புகைப்படம் எடுக்கவும் சிறுசிறு தொகைகளை மக்களிடம் வாங்கினார். தனக்காக மக்களும் தொண்டர்களும் வழங்கிய நிதியையும், தனது சொந்த உடைமைகளையும் கொள்கைப் பரப்புவதற்காக விட்டுச்சென்றவர்.

15. பொது மேடைகளிலும் நாகரீகம் பேணியவர். தள்ளாத வயதிலும் கடவுள் வாழ்த்துப் பாடினாலும், தேசிய கீதம் பாடினாலும் அதில் தனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் எழுந்து நின்று அவை மரியாதையைக் காத்தத் தலைவர்.

16. சிக்கனமாகச் சேர்த்தத் தொகையில் இருந்து திருச்சியில் அரசுக் கல்லூரியும், திருச்சி மருத்துவமனைக்கு குழந்தைகள் பிரிவும், ஈரோட்டில் அரசு மருத்துவமனையும் உருவாக நிதி வழங்கியவர்.

17. அவரது போராட்ட வடிவங்கள் உருவாக்கிய அதிர்வலைகள் தான் மக்களைச் சிந்திக்க வைத்தது. விவாதிக்க வைத்தது. தனது படத்தை எதிரிகள் செருப்பால் அடித்த போதும், படத்தை எரித்த போதும் படங்களையும் செருப்புகளையும் பாதி விலைக்கு அனுப்புகிறேன். நன்றாக எரியுங்கள், நன்றாக அடியுங்கள் என்று அறிவித்தத் தலைவர்.

18. நாடாளுமன்றத்துக்குள்ளேயே நுழையாத அந்தத் தலைவர் தான் இந்திய அரசியல் சட்டத்தைச் சமூக நீதிக்காகத் திருத்தச் செய்தவர். அதற்கான மக்கள் போராட்டத்தை நடத்தினார். அரசியல் சட்டத்தை எரித்துப் போராட்டத்திலும் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிடக்கூடாது என்று எச்சரித்தவர். தொடர் வண்டி நிலைய இந்தி அழிப்புப் போராட்டத்திலும் நடைமேடை (platform) சீட் வாங்கி தோழர்கள் செல்லுங்கள் என்று கட்டளையிட்டவர். குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டத்தில் அக்ரகாரத்தை எரிப்போம் என்று எச்சரித்த போது நேரம், தேதியை அறிவித்துவிட்டுத்தான் செய்வோம் என்று கூறியவர். தாக்குதல் போராட்டத்தையும் ஜனநாயகப்படுத்தியவர்.

19. வர்ணாஸ்ரமத்தை அழியவிடாமல் பாதுகாக்க இராஜாஜி முதல்வராக இருந்த போது கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்தைப் போர் சங்கு ஊதி நிறுத்திக் காட்டியவர். இராஜாஜி பதவியை விட்டுப் பாதியிலேயே ஓடச் செய்தவர்.

20. அவர் அறிமுகப்படுத்திய தமிழ் எழுத்து வரி வடிவம் தான் எம்.ஜி.ஆர். ஆட்சியால் அங்கீகரிக்கப்பட்டு மக்கள் பயன்பாடாக மாறி நிற்கிறது.

21. வைதீக சடங்கு மறுப்புத் திருமணங்களை அறிமுகப்படுத்தி அதை அரசின் சுயமரியாதை சட்டமாக பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்த போது கொண்டுவர வழிவகுத்தவரும் அவர் தான்.

22. மாட்டுக்கறி உணவுக்கு மக்கள் இயக்கம் நடத்தியவர். மாநாட்டுப் பொது மேடைகளில் சுயமரியாதைத் திருமணங்களை நிகழ்த்திய இயக்கம்.

23. தமிழர்களின் சூத்திர இழிவு ஒழிப்பு என்ற சமூகப் புரட்சி தன் தலையின் மீது மட்டுமே விழுந்துள்ளது. வேறு எவரும் இல்லையே என்ற சமூகக் கவலையோடு தனது சொந்தக் கவலையாகக் கருதிக் களத்தில் நின்றவர் பெரியார்.

24. மூத்திரச் சட்டியுடன் மேடையில் முழங்கினார். தனது குடலிறக்க வலியையும் சகித்துக் கொண்டு தனது இறுதி உரையை மரண வாக்குமூலமாக விட்டுச் சென்றவர் பெரியார்.

25. "ஒருவன் தன்னுடைய சொந்தக் காரியத்தைப் பொறுத்தமட்டில் தான் மானத்தையும் காலத்தையும் கவனிக்க வேண்டும். பொதுநலன் - பொதுத் தொண்டு என்று வந்துவிட்டால் இவை இரண்டையுமே இலட்சியம் செய்யக் கூடாது" என்று பொதுத் தொண்டுக்குப் புதிய இலக்கணம் தந்தவர். மான மீட்பு இலட்சியப் பணியில் மானம் பார்க்கக் கூடாது என்று சொன்ன தலைவர் உலகத்தில் வேறு எவராவது உண்டா?

26. இமயமலை வெயிலில் காய்கிறதே என்று குடை பிடிப்பவன் போல் எனது பணி என்று பெரியார் தன்னுடைய பணியைக் குறிப்பிட்டார். மலையை மயிரால் இழுக்கிறேன். வந்தால் மலை போனால் மயிர் என்று, தான் ஏற்றுள்ள தொண்டின் கடுமையை உணர்ந்து களமிறங்கிப் போராடியத் தலைவர் பெரியார்.

27. தமிழர் உரிமைப் போராட்டக் களத்தில் அடக்குமுறைகளை வரவேற்ற பெரியார் அதையும் மீறிப் பேசுகிறார். "என்னை மகாத்மாவாக்கி விடாதீர்கள். தெய்வத்தன்மை பொருந்தியவனாகக் கருதப்பட்டு விட்டால் மக்கள் என் வார்த்தையை ஆராய்ந்து பார்க்க மாட்டார்கள். நான் அயோக்கியன் என்று சொல்லப்பட்டால் என் வார்த்தைகள் ஜாக்கிரதையாக கவனிக்கப்படும்" - குடிஅரசு 11.10.1934. அடக்குமுறையையும் தன்மான இழப்பையும் மட்டுமல்ல தனது நேர்மையையும் தமிழர்களின் மானத்துக்காக இழக்கத் துணிந்தவர். உலகில் வேறு எவராவது உண்டா?

பெரியார் மீது அவதூறுகளை வீசுவது வரலாற்றில் புதிதல்ல. பெரியாரை இழிவுபடுத்துவதால் அவர் சாதனைகளாகப் பதித்துவிட்டுச் சென்ற சமூகநீதி, சுயமரியாதை, பெண்ணுரிமைக் கொள்கைகளைச் சனாதனத்திற்குப் பின்னோக்கி இழுத்துச் செல்ல முடியுமா? நிச்சயம் முடியாது. இந்தப் புரிதல் இல்லாத மடையர்களே இப்படி உளறிக் கொண்டுள்ளனர். தனது மூச்சு அடங்குகிற காலத்தில் கூட இறுதிப் பேருரையில் தனித் தமிழ்நாடு முழக்கத்தை ஓங்கி ஒலித்தார். தமிழ்நாடு நீங்கலாக இந்தியத் தேசியப் படத்தை எரித்தார். அப்போது ஆதித்தனாரின் மானமுள்ள நாம் தமிழர் கட்சி பெரியாரோடு இணைந்து இந்தப் போராட்டத்தில் களமிறங்கியது.

தமிழ்த்தேசியத்தை விற்பனைப் பொருளாக்கி சொகுசு வாழ்க்கைக்கு வணிகமாக்கிடும் 'தமிழ் கிரிமினல்'களால் இத்தகைய அவதூறுகள் வீசப்படுகிறது. தமிழ்நாட்டில் அது செல்லுபடியாகாது. பார்ப்பனர்கள் கோடாரிக் காம்பு கிடைத்துவிட்டது என்று ஆட்டம் போடுகிறார்கள். ஆனால் பார்ப்பனிய எதிர்ப்பு இப்போது மேலும் கூர்மையடைகிறது. பெரியாரியம் மேலும் வேகமெடுக்கிறது. வரவேற்போம்.

- விடுதலை இராசேந்திரன்.

# ஜாதி அமைப்பு முறையைத் தகர்க்காமல் உழைக்கும் வர்க்கம் ஒன்றுபடாது!

**இனியவன்**

**தற்போது இந்தியாவில் நிலவுகிற பாசிச காவி கார்ப்ரேட் இந்துத்துவ அரசியல் சூழலில் கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் தோழர்கள் ஏற்பாடு செய்திருக்கும் இந்த அரசியல் மாநாட்டிற்கு நான் சார்ந்திருக்கும் சிபிஐ (மா லெப) ரெட் ஸ்டார் சார்பாக புரட்சிகர வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

மார்க்சிய பார்வையில் பெரியார், அம்பேத்கார் என்கிற தலைப்பு எனக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கரை மார்க்சிய பார்வையில் அணுகுவது என்னளவில் சற்று கடினமான பணி என்பதால் தோழர்களின் ஒப்புதலோடு அதனை சற்று மாற்றத்திற்கு உட்படுத்தி "கம்யூனிஸ்ட் பார்வையில் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர்" என்கிற தலைப்பினில் எனது உரையை முன்வைக்கிறேன்.

ஏனென்றால், மார்க்சியம் என்பது சமூக அரசியல் பொருளாதாரக் கோட்பாட்டு அடிப்படையிலான தத்துவம். பொதுவாக கோட்பாட்டளவில் ஓர் மார்க்சிஸ்ட்டாக வாழ்வது என்பது மிகவும் கடினமான காரியம். ஆனால் கம்யூனிஸ்ட் என்பது மார்க்சிய அடிப்படையிலான கட்சி, கொள்கை அரசியல் முன்னெடுப்பு சார்ந்தது என்பதனால் அந்தப் பார்வையில் தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கர் ஆகியோரை அணுகுவது எளிமையான முறையாகும். எனக்குத் தெரிந்த வரையில் முற்றுமுதலாக மார்க்சியராக வாழ்தல் என்பது கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களுக்குக் கூட முழுமையாக சாத்தியமாகாது. செயல் அதே வேளையில் கம்யூனிஸ்ட்டாக இருப்பது சற்று எதார்த்தவாதமாக இருக்கிறது என்கிற புரிதலின் அடிப்படையில் தான் நான் இந்த உரையைத் தொடங்குகிறேன்.

எனது உரையில் புரட்சியாளர் அம்பேத்கர் குறித்து முன்வைக்கப்படும் கருத்துகள் அனைத்தும் சிபிஐ (மா லெ) ரெட் ஸ்டார் கட்சியின் 12ஆவது பேராயத்தில் (கோழிக்கோடு, 2022) ஜாதி ஒழிப்புத் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகளை கட்சியின் அரசியல் தலைமைக்குழு, மத்தியக் குழு ஆகியவற்றில் விரிவாக விவாதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நவம்பர் 2024 இல் பஞ்சாப் மாநிலம் பர்னாலாவில் கூடிய கட்சியின் அகில இந்திய பிளீனத்தில் இறுதி செய்யப்பட்ட பகுதி அளவு முடிவுகளின் அடிப்படையில் முன்வைக்க உள்ளேன். ஆனால், தந்தை பெரியார் குறித்த சி பி ஐ (மா லெ) ரெட் ஸ்டார் கட்சியில் இன்னும் முழுமையான அளவில் விவாதத்திற்கு வரவில்லை என்கிற போதும் கட்சியின் வழிகாட்டுதலில் செயல்படும் அனைத்து இந்திய ஜாதி ஒழிப்பு இயக்கத்தின் கொள்கை அறிக்கை மற்றும் தந்தை பெரியார் குறித்து எமது கட்சிக்குள் இயல்பாக நிலவும் கருத்துகளின் அடிப்படையில் அமைந்திருக்கும் என்பதனையும் எனது உரையின் அடித்தளமாக பதிவிட்டுக் கொள்கிறேன்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் தோழர் தா.செ.மணி அவர்கள் தகுந்த தரவுகளுடன் "பெரியாரும் மார்க்சியமும்" என்கிற உரையை 2021இல் ஆற்றியுள்ளார் என்பதுடன் அது புத்தகமாகவும் வெளிவந்துள்ளது என்கிற காரணத்தால் பெரியார் குறித்த எனது உரையில் மேற்கண்ட நூலில் இருந்து பல செய்திகளை எடுத்துக் கொண்டுள்ளேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தந்தை பெரியார் அவர்களின் பொதுவுடமை பார்வை, செயல்பாடுகள் மீதான செய்திகள் பல பதியப்பட்டுள்ளதால் கம்யூனிஸ்ட் பார்வையில் அண்ணல் அம்பேத்கர் என்கிற செய்திகளை பதிவது சற்று ஆக்கப்பூர்வமாக இருக்கும் என்கிற வகையில் என் உரையை முன்வைக்கிறேன்.

தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோர் இருவரும் பொதுவுடமையை நேசித்தவர்கள். ஆனால் அன்றைக்கு இந்தியாவில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் ஜாதி ஒடுக்குமுறை மீது சரியாக கவனம் செலுத்தாத காரணத்தால் அவர்கள் இருவரும் இந்தியாவில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் குறித்து விமர்சிக்க நேர்ந்தது. மற்றபடி அவர்கள் இருவரும் பொதுவுடமைத் தத்துவத்தை முற்றிலும் மறுத்தவர்கள் அல்ல என்பதே உண்மை. அண்ணல் அம்பேத்கர் எழுதிய புத்தரா? கார்ல் மார்க்சா? என்கிற நூல் மார்க்சியம் மீதான கடுமையான விமர்சனங்களை முன் வைத்துள்ளதை நாம் மறுக்கவில்லை என்கிற போதும் இந்திய சமூகத்தில் நீடித்து வரும் ஜாதி அமைப்பு முறை வழியிலான சமூக ஒடுக்குமுறை, அதன் வழியாக சுரண்டல் வாதத்திற்கு உள்ளாகும் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பற்றிய ஆய்வும், வரலாற்றின் வழியாக பார்ப்பனியத்தின் வளர்ச்சி, சூழ்ச்சி, நீடித்திருக்கும் காரணம், பெண்ணுரிமை, நில உரிமை, தொழிலாளர் நலன் பற்றிய அண்ணலின் எழுத்துகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும் பொழுது அவரின் ஜனநாயகப் பார்வை நன்கு விளங்கும்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்கிற கொள்கை முழக்கத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டார். இந்த முழக்கங்கள் கார்ல் மார்க்ஸ் காலத்தில் அவரால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரான்சு புரட்சியின் முதன்மை முழக்கமாக திகழ்ந்து என்கிற போதும் இந்த முழக்கங்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே புத்தரால் முன்வைக்கப்பட்டது என்பதற்காகவே அம்பேத்கர் இதனை முழுமையாக ஏற்றுக் கொண்டார். சுதந்திரம், சமத்துவம் ஆகியவை மார்க்சியத்திலும் முதன்மைக் கூறுகளாக இருந்த போதிலும் சகோதரத்துவம் என்கிற சொல்லாடல் மார்க்சியப் பார்வையில் சற்று வேறுபாட்டைக் கொண்டுள்ளது. சுரண்டும் வர்க்கமும் சுரண்டலுக்கு உள்ளாகும் வர்க்கமும் சகோதரத்துவம் கொள்வது இயல்பில் நடக்க இயலாத அல்லது நியாயமாக இருக்க முடியாது என்பதை மார்க்சியம் வரலாற்றின் இயங்கியல் பார்வையில் தெளிவாக வரையறுக்கிறது. ஆனால் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வர்க்கப் போர் என்பது வன்முறை வழியிலான கருத்தாக்கம் எனவே சகோதரத்துவம் என்கிற அமைதி வழியிலான சமூக மாற்றத்தை வலியுறுத்தினார். இவ்வகையில் மார்க்சியத்தின் அடிப்படை கொள்கையில் அம்பேத்கார் மாறுபட்ட போதிலும் மக்களுக்கான ஜனநாயகத்தை எல்லா வகையிலும் வலியுறுத்தினார்.

தந்தை பெரியாரைப் பொறுத்தவரையில் 1929 முதல் 1936 வரை பொதுவுடைமைத் தத்துவத்தின் அடிப்படையில் தனது அமைப்பை உருவாக்க முற்பட்டார். ஆனால் அப்போதிருந்த காலனியாதிக்க அரசின் நெருக்கடியினால் அதனை சற்று கைவிட்டு விலக வேண்டிய தருணம் உண்டானதை அவரே வெளிப்படையாக அறிவித்தார் என்பதே அவரின் நேர்மைக்கு சான்று.

சமூகநீதி அரசியலின் முதன்மையாளர்களாக விளங்கும் அம்பேத்கரும், பெரியாரும் என்றும் தங்களை மார்க்சிஸ்ட் என்றோ, கம்யூனிஸ்ட் கட்சிக்காரர் என்றோ நேரடியாக அறிவித்துக் கொள்ளவில்லை என்கிற படியால் அவர்களிடம் முழுமையான கம்யூனிஸ்ட் கருத்தாக்கங்களை எதிர்பார்த்து அவதூறுகளை, பயனற்ற சொல் வாதங்களை முன்வைப்பது தற்கால அரசியல் சூழலில் தேவையற்ற ஒன்று. அதனைப் புறந்தள்ளி அவர்கள் இருவரின் கருதாங்கங்கள், செயல்பாடுகள், போராட்டங்கள் ஆகியவை கம்யூனிஸ்ட் கருத்தாங்கங்களுக்கு நட்பு முரணாக இருப்பதை உணர்ந்து செயல்படுவதே அறிவார்ந்த செயலாக இருக்கும்.

மார்க்சிய ஆசான் கார்ல் மார்க்ஸ் இந்தியா பற்றிய குறிப்புகளில் "சரக்கு உற்பத்திக்கு வேலைப் பிரிவினை ஓர் தேவையான நிபந்தனை. ஆனால் வேலைப் பிரிவினைக்கு சரக்கு உற்பத்தி தேவையான நிபந்தனை அல்ல என்று கூறுவதுடன் புராதன இந்தியாவில் சரக்கு உற்பத்தி இல்லாமலே சமூகப் பிரிவினை இருந்து வருகிறது என ஜாதியை குறித்து சாடியுள்ளார். அவ்வகையில் அன்றைய நாட்களில் கார்ல் மார்க்ஸ் தனக்கு கிடைத்த குறிப்புகளின் அடிப்படையில் இந்திய சமூகத்தில் ஜாதியின் பாத்திரம் குறித்து எழுதியுள்ளார். பொதுவாக அனைத்து வகையான சுரண்டல்களுக்கும் எதிரான தத்துவம் தான் மார்க்சியம். அவ்வகையில் இந்தியாவில் உழைக்கும் மக்களை சுரண்டி கொழுக்கும் வர்க்கத்தின் தத்துவமாக பார்ப்பனியம் கோலோச்சி வருகிறது. பார்ப்பனியம் என்பது உழைப்பு சுரண்டலின் இந்திய வடிவம் ஆகும். அவ்வகையில் பார்ப்பனியத்தைப் பாதுகாக்கும் ஜாதி அமைப்பு முறையை தகர்க்காமல் உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையை நிலை நாட்டுவது சாத்தியமற்ற செயல். ஆகவே இந்திய சமூகத்தில் ஜாதியும் வர்க்கமும் பிரிக்க முடியாத அளவில் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுகிறது.

அரசியல் பொருளாதாரத்தின் சாராம்சத்தில் தான் அச்சமூகத்தின் இயங்குதல் நீடித்து வருகிறது. அவ்வகையில் அடிக்கட்டுமானத்தை தகர்த்திட வர்க்கப்போராட்டமேதீர்வு. அரசியல் பொருளாதாரத்தைத் தவிர்த்து ஓர் சமூகத்தில் இருந்து வரும் மொழி, பண்பாடு, இனம் ஆகியவை எல்லாம் வெறும் மேல்கட்டுமானம் தான். எனவே அடிக்கட்டுமானத்தைத் தகர்க்கும் பொழுது மேல்கட்டுமானமும் வீழ்ந்து விடும் எனபதே கம்யூனிஸ்ட் கட்சிகளின் கொள்கையாக இருந்தது வந்தது. ஆனால், 20 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் முதலாளித்துவம், ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சியின் போக்கில் சமூகவியலை ஆய்வு செய்த பல மார்க்சிய அறிஞர்கள் அரசியல் பொருளாதாரத்தை மீறிய அளவில் சில வேளைகளில் சமூகத்தின் மேல்கட்டுமானமாக விளங்கக் கூடிய மொழி, பண்பாடு ஆகியவை கூட சமூக இயங்கியலை தீர்மானிக்கும் சக்திகளாக விளங்குவதைத் தக்க தரவுகளோடு முன் வைத்ததைப் பெரும்பான்மை மார்க்சியர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவ்வகையில் இந்தியாவில் கூட ஜாதி என்ற மேல் கட்டுமான அமைப்பின் தீவிரத் தன்மையின் காரணத்தால் ஜாதியும் வர்க்கமும் என்கிற தலைப்பில் பல்வேறு விவாதங்கள் 1990 கால கட்டங்களில் முன்னெடுக்கப்பட்டது. அந்த ஆய்வுகளின் அடிப்படைகளில் இன்றைக்கு இந்தியாவில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பெரும்பான்மையான கம்யூனிஸ்ட் கட்சிகள் ஜாதி அமைப்பு முறை உழைக்கும் மக்களின் வர்க்க அணி சேர்க்கைக்கு மாபெரும் எதிரியாக உள்ளது. ஆகவே இந்தியாவைப் பொருத்தமட்டில் ஜாதியும் வர்க்கமும் பிரிக்க முடியாத அளவில் ஒன்றிணைந்து உள்ள காரணத்தால் ஜாதி என்கிற சமூக ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தையும், வர்க்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தையும் ஒன்றிணைந்து நடத்த வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். அதன் பின்னரே ஜாதி ஒழிப்புக்கு என்று தனி கவனத்தை கம்யூனிஸ்ட் கட்சிகள் முன்னெடுக்கத் தொடங்கினர்.

ஜாதி ஒழிப்பு என்கிற கொள்கை நிலையை கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏற்றுக் கொண்ட பொழுது ஜாதி குறித்தான ஆய்வுகளில் அண்ணல் அம்பேத்கரின் கருத்துகளையும் உள்வாங்கிக் கொண்டனர். அதன் பின்னர்தான் பார்ப்பனியம் , பார்ப்பன - பனியா எதிர்ப்பு மாநாடுகளை கம்யூனிஸ்ட் கட்சிகள் அல்லது கம்யூனிஸ்ட் கட்சிகளின் வெகுஜன அமைப்புகள் நடத்தத் தொடங்கின. அவ்வகையில் அண்ணல் அம்பேத்கர், தான் வாழ்ந்த காலத்தில் எழுதிய பார்ப்பனியம், பார்ப்பனியத்தின் அடிப்படையாக விளங்கக்கூடிய ஜாதி அமைப்பு, ஜாதி அமைப்பைப் பாதுகாக்கின்ற இந்து மதவாத அமைப்பு என அனைத்தையும் இன்றைக்கு நாம் பேசி வருகிறோம்.

எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளும் தாங்கள் வகுத்துக் கொண்ட மூலயுத்தி (Strategy), செயலுத்தி (Tactics) அடிப்படையில் தான் செயல்படுவார்கள். மூலயுத்தி தான் ஓர் கம்யூனிஸ்ட் கட்சியின் முதன்மைக் கொள்கை. மாறாக செயலுத்தி என்பது நிகழ்கால அரசியல், சமூகத்தின் தாக்கம், சர்வதேச சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் அவ்வப்போது மாற்றத்திற்கு உள்ளாகும். அவ்வகையில் இந்திய சமூகத்தில் வர்க்கமும் ஜாதியும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளதை சிபிஐ (மா லெ) ரெட் ஸ்டார் கட்சி முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தியாவில் வர்க்கப் போராட்டமும் ஜாதி ஒழிப்புப் போராட்டமும் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டி அண்ணல் அம்பேத்கார் முன்வைத்த கருத்துகளின் உண்மைத் தன்மையை சமூக இயங்கியல் வழியாக ஏற்றுக்கொண்டு ஜாதி ஒழிப்பு, கட்சியின் மூலயுத்தியாக முன்வைத்துள்ளது. மார்க்சியம் என்பது முற்போக்குத் தன்மை கொண்ட சமூக அறிவியல் கருத்தியலாகும். ஆகவே சமூக அறிவியலில் நாம் முன்பு பார்க்கத் தவறிய பிழைகளை நேர் செய்து கொள்வதே ஓர் கம்யூனிஸ்ட் கட்சியின் சரியான செயல்பாடாகும். தோழர் லெனின் கூறுவது போல "செயல்பாடற்றத் தத்துவம் பயனற்றது" என்கிற கூற்றை கட்சி உள்வாங்கி கொண்டதன் வழியாக ஜாதி ஒழிப்பு கருத்தியலை முழுமையாக உள்வாங்கிக் கொள்கிறோம்.

(தொடரும்........)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கோவையில் அம்பேத்கர் - பெரியார் நினைவுநாள் பொதுக்கூட்டம்!



கோவை மாநகர மாவட்டக் கழக சார்பில் புரட்சியாளர்கள் அம்பேத்கர் - பெரியார் நினைவுநாள் பொதுக்கூட்டம் 24.12.2024 அன்று சிவானந்தா காலனி பேருந்து நிறுத்தம் அருகில் கோவை மாநகரச் செயலாளர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார்.

முன்னதாக நிகர் கலைக்குழுவின் பறையிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும் “தற்கால அரசியலும் அம்பேத்கரும்” என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், “ஜாதி ஒழிப்பில் தந்தை பெரியார் “ என்ற தலைப்பில் தமிழ்ப்புலிகள் கட்சியின் தலைவர் நாகை திருவள்ளுவனும், “மார்க்சிய பார்வையில் பெரியாரும் - அம்பேத்கரும்” என்ற தலைப்பில் சிபிஐ (மாலெ) ரெட் ஸ்டார் மத்தியக்குழு உறுப்பினர் மு. இனியவனும் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தமிழ்ப்புலிகள் கட்சி பொதுச்செயலாளர் இளவேனில், தலைமை செயற்குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர் செல்வம், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, கோவை மாநகரத் தலைவர் நிர்மல் குமார், தி.மு.க. கணபதி பகுதிச் செயலாளர் கோவை லோகு, கோவை வி.சி.க. செய்தி தொடர்பு மாவட்ட அமைப்பாளர் கோவை ராசா, கோவை மாநகராட்சி 68ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் கமலாவதி போஸ், ம.தி.மு.க. கணபதி பகுதிச் செயலாளர் ராமநாதன், தி.மு.க. 68ஆவது வட்டச் செயலாளர் போஸ், கோவை மாநகர மாவட்ட தோழர்கள் இரத்தினபுரி சதீஸ், ஸ்டாலின் ராஜா, மாதவன், ராஜாமணி, ராஜலட்சுமி, ராமகிருஷ்ணன், நிலவழகன், அமுல்ராஜ், திருப்பூர் முத்துக்குமார், வசந்தி, சங்கீதா, சரஸ்வதி, கோவிந்தராஜ், செம்பருதி, சண்முகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிறைவாக தமிழ்நாடு மாணவர் கழக கோவை மாவட்டப் பொறுப்பாளர் நவீன் நன்றி கூறினார்.

### பொதுக்கூட்டத் துளிகள்

- புரட்சிப் பெரியார் முழக்க ஏட்டிற்கான சந்தா தொகையாக ரூ. 30,000/- யை அமுல்ராஜ், சதீஷ், இராமகிருஷ்ணன், நிலவழகன் ஆகியோர் கழகத் தலைவரிடம் வழங்கினர்.
- சமூக செயற்பாட்டாளர் லோகநாயகி கழகத் தலைவர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார்.
- திராவிட முன்னேற்றக் கழக மாணவரணி பொறுப்பாளர்கள் அருண், மதிவாணன், கதிரவன் ஆகியோர் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் மாணவரணிப் பொறுப்பாளர்களுக்கு பெரியார் முழக்கத்திற்கான ஆண்டு சந்தாவை செலுத்தினர்.

## முதல் பக்கத் தொடர்ச்சி

சிறுத்தைகள் கட்சி, மக்கள் அதிகாரம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள், தோழமை அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பகுதி மக்களும், கழகத்தின் இளம் தோழர்களும் பூங்கொத்துகளை அளித்து வரவேற்றனர். கழகத் தோழர்கள், நிர்வாகிகள், தோழமை இயக்கத்தினர் பலரும் பயனாடை அணிவித்தும் நூல்களை வழங்கியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

### கழகத் தலைவர் வாழ்த்துரை

“பெரியார் அறிஞர்களை நோக்கி எழுதியவர் இல்லை, மாறாக பாமர மக்களிடம் போய் பேசியவர். அவருடைய உரைகளை முழுமையாகப் படிக்காமல் யாராலும் அவரை சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. பெரியாரைக் கோட்பாடாக்க முயற்சித்தவர்கள் மிக மிகக் குறைவுதான். அதில் எம்.எஸ்.எஸ். பாண்டியனைச் சொல்லலாம். அவருக்கு அடுத்து பெரியாரியலைக் கோட்பாட்டு வடிவத்தில், நிகழ்கால அரசியல், சமூக சூழலோடுப் பொருத்தி முன்வைக்கிற ஆற்றல் மிக்க எழுத்தாளராக தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்கள் திகழ்கிறார். அன்றைக்கு பெரியார் பேசியதை, இன்றைக்கு சமகால சிக்கல்களுக்குள் பொருத்தி எப்படிப் புரிந்துகொள்வது என்பதற்கு நமக்கு வழிகாட்டியாக தோழர் விடுதலை இராசேந்திரன் உள்ளார்.

சமகால நிகழ்வுகளில் நாம் என்ன நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்ற திசைவழியைக் காட்டுவதாகத்தான் அவருடைய தலையங்கங்களும், கட்டுரைகளும் உள்ளன. டிரெண்ட் செட்டர் என்ற வார்த்தை இப்போது சொல்லப்படுகிறது. பல விவகாரங்களில் நாம் டிரெண்ட் செட்டராக இருந்ததற்கு தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்களின் சிந்தனையும், எழுத்துகளும், உரைகளும், அவரோடு நாம் ஆற்றிய உரையாடல்களும் தான் காரணம். அப்படிப்பட்ட பெருமைமிக்க தோழருக்கு தமிழ்நாடு அரசு அவருடைய செயல்பாடு, எழுத்து ஆகியவற்றுடன் சேர்ந்து இயக்கமாகவும் அவரைப் புரிந்துகொண்டு இந்த விருதை வழங்கியிருக்கிறது. நாம் தொடர்ந்து பெரியாரியலை முன்னெடுத்து அதன் வழியாக தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்களுக்கு பெருமை சேர்ப்போம்.”

தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசன், வி.சி.க. மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் சாரநாத், மக்கள் அதிகாரம் அமைப்பின் சென்னை மாவட்ட நிர்வாகி காமராஜ், தமிழர் எழுச்சி இயக்க ஒருங்கிணைப்பாளர் வேலுமணி, வழக்கறிஞர் திருமூர்த்தி, கழக தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

### பொதுச்செயலாளர் ஏற்புரை:

“இதுபோல ஒருவரையொருவர் பாராட்டிக்கொள்கிற பண்பு நமது இயக்கத்தில் கிடையாது. இப்படிப் பாராட்டிப் பேசுவது ஒரு புதிய உணர்வாக இருக்கிறது. இந்த விருது அறிவிப்பு வந்தபோது அது ஒரு செய்தியாகத்தான் தெரிந்ததே தவிர, என்னுள் எந்த ஒரு சலசலப்பும் ஏற்படவில்லை. நம்முடைய இயக்கத் தோழர்கள் நம்முடைய ஆதரவாளர்கள் இதைக் கொண்டாடியபோதுதான் எனக்குள் ஓர் உணர்வாக மாறியது. இந்த பெரியார் விருது நம்முடைய தோழர்களுக்கும் இயக்கத்திற்கும் கொண்டாட்டத்தையும், அங்கீகாரத்தையும் தருகிறது என்ற உணர்வு அது.

நீண்டகாலமாக இந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறேன், இது மிகுந்த சிரமமான பணி என்று எல்லோரும் சொன்னார்கள். உண்மையில் பெரியாரியல் சார்ந்த எழுத்தும் செயல்பாடும்தான் எனக்கு மனநிறைவைத் தரும் பணி. மகிழ்ச்சியான வேலையாகத்தான் நான் கருதுகிறேன். எனக்கு வேறு எந்தப் பணியும் தெரியாது. மற்றபடி, இதை நான் தியாகமாகவோ, கடினமான வேலை என்றோ கருதவில்லை.”

இந்த நிகழ்ச்சியை சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் உமாபதி தொகுத்து வழங்கினார். இறுதியாக கழகத் தோழர்கள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, முழக்கமிட்டனர். தமிழ்நாடெங்கும் பல்வேறு மாவட்டங்களில் கழகத் தோழர்கள் சுவரொட்டிகளை ஒட்டியும், சமூக ஊடகங்களில் பதிவிட்டும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.



**இந்நிகழ்ச்சியில் கழகத் தோழர்கள் ரம்யா - பிரகாசு இணையரின் பெண் குழந்தைக்கு ‘சிறகி’ என கழகத் தலைவரும், பொதுச்செயலாளரும் இணைந்து பெயர் சூட்டினர். அதன் மகிழ்வாக, புரட்சிப் பெரியார் முழக்கம் இதழுக்கு ரூ.2,000/- வளர்ச்சி நிதியாக சிறகி குடும்பத்தினர் வழங்கினர்.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : January 18, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran